# Eastern University, Sri Lanka
## Faculty of Arts and Culture
## 4th Year 1st Semester Special Degree Examination in Economics (2011/12 Batch)
## 2015/2016 (June, 2017)
## ECS 4123: Research Methodology in Economics

LIBRARY
EASTERN UNIVERSITY, SRI LANKA

லா வினாக்களுக்கும் விடையளிக்குக. நேரம்: மூன்று மணித்தியாலங்கள்

---

a. சமூகவிஞ்ஞான ஆய்வு என்றால் என்ன? விளக்குக. (05 புள்ளிகள்)

b. ஒரு ஆய்வினை மேற்கொள்வதற்கு தேவையான காரணங்களை பட்டியலிட்டு அவற்றில் மூன்றினை சுருக்கமாக விளக்குக. (09 புள்ளிகள்)

c. ஓர் ஆய்வாளன் ஆய்வினை மேற்கொள்கின்ற போது பின்பற்றவேண்டிய படிமுறைகளை சுருக்கமாக விளக்குக. (11 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

a. ஓர் ஆய்வாளன் ஆய்வுத்தலைப்பினை தெரிவுசெய்கின்றபோது கவனிக்க வேண்டிய மற்றும் தவிர்க்க வேண்டிய விடயங்களை உதாரணங்களுடன் விளக்குக? (06 புள்ளிகள்)

b. ஆய்வுப்பிரச்சினை என்றால் என்ன? ஆய்வுகளில் ஏன் ஆய்வுப்பிரச்சினை முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது என உதாரணம் தந்து விளக்குக. (06 புள்ளிகள்)

c. ஓர் ஆய்வின் தலைப்பினைத் தீர்மானிப்பதற்கு நூலாய்வு எவ்வாறு உதவியாக உள்ளது என விளக்குக. (07 புள்ளிகள்)

d. பின்வரும் உசாத்துணைகள் உமது ஆய்வில் உள்ளடக்கப்படவேண்டியுள்ளது எனக்கொள்க. உமது ஆய்வின் அத்தியாயங்களில் பொருத்தமான இடங்களில் இவற்றினை காட்டும்முறையினை குறிப்பிடுக.

   i. Alfaro, L., Chanda, A., Kalemli-Ozcan, S. and Sayek, S. (2004). FDI and economic growth: the role of local financial markets, *Journal of International Economics*, Vol 64, pg.89–112.

   ii. Frenkel, G. (2004). A panel analysis of bilateral FDI flows to emerging economies, *Economic System*, 28, pp.281-300.

   iii. Chakrabory, C. and Nunnenkamp, P. (2008). Economic Reforms, FDI, and Economic Growth in India: A Sector Level Analysis. *World Development*, 36, pp1192–1212.

(06 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

3.

a. நடைமுறையாக்க காரணிகளில் இருந்து பிரதியீட்டுக்காரணிகளை வேறுபடுத்துக. (06 புள்ளி

b. மாதிரியெடுப்பு வகைகளை பட்டியலிட்டு அவற்றில் மூன்றினை சுருக்கமாக விளக்குக. (06 புள்ளி

c. "Likert scale" பகுப்பாய்வுமுறை என்பதன் மூலம் கருதப்படுவது யாது? இவ்வாய்வு முறையில் ஒவ்வொரு காரணிகள் தொடர்பாகவும் எவ்வாறு முடிவுகள் எடுக்கப்படுகின்றன என சுருக்கமாக விளக்குக. (07 புள்ளி

d "குரன்பாஞ்"( cronbach's) பகுப்பாய்வு என்றால் என்ன என விளக்குக. (06 புள்ளி
(மொத்தம் 25 பு

4.

a. பல்மாறி பிற்செலவு முறைமூலம் தரவுப்பகுப்பாய்வு மேற்கொள்கின்ற போது கவனிக்க வேண்டிய விடயங்களை சுருக்கமாக குறிப்பிடுக. (05 புள்ளி

b. பின்வரும் பல்மாறி பிற்செலவு முறைமூலம் பெறப்பட்ட முடிவுகளை கருத்திற் கொள்க.

$$\hat{Y}_i = 7.8148 + 3.4563X - 1.0997D$$

இங்கு Y= உற்பத்தி எனவும் D = ஊழியத்தின் பால்நிலை எனவும் கொண்டு ஊழியத்தின் பால்நிலை எவ்வாறு உற்பத்தியின் மீது செல்வாக்கு செலுத்துகிறது என விளக்குக. (05 புள்

c. இலங்கையின் ஏற்றுமதியினை தீர்மானிக்கும் காரணிகள் தொடர்பான ஆய்வென்றில் பல்மாறி பிற்செலவு முறைமூலம் பின்வரும் முடிவுகள் பெறப்பட்டன சார்மாறி ஏற்றுமதி என கொள்க.

| சாராமாறிகள் | குணகப்பெறுமதி | t- பெறுமதி | p-பெறுமதி |
|---|---|---|---|
| இறக்குமதி | -2.2777 | -20.18 | 0.000 |
| வேளிநாட்டு நேரடி முதலீடு | -0.5166 | -8.62 | 0.000 |
| மொத்த மூலதனவாக்கம் | 1.8187 | 10.73 | 0.000 |
| அரச கடனாக்கம் | -0.2485 | -0.36 | 1.854 |
| வெட்டுத்துண்டு | 2.0654 | 5.1235 | 0.000 |
| $R^2$ | 0.7865 | | |

I. சாராமாறிகளுக்குரிய குணகப்பெறுமதிகளின் சார்மாறி மீதான தாக்கங்களை விளக்குக. (05 புள்

II. சாராமாறிகளின் குணகப்பெறுமதிகளுக்குரிய பொருண்மை மட்டத்தினை அளவீடு செய்க. (04 புள்

III. பல்மாறி பிற்செலவு சமன்பாட்டினை தருக. (03 புள்

IV. இவ் ஆய்விற்கு தெரிவு செய்யப்பட்ட சாராமாறிகள் தொடர்பாக கருத்துரைக்குக (03 புள்
(மொத்தம் 25 புள்